முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 391 /2021

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் நாள் பி.த.சா 1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திரு.எஸ்.ஜவகர், B.L., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சம்பத்குமார் | வயது | : | 60 |
| தந்தை/கணவர் பெயர் | : | சீனுவாசபிள்ளை | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

வாதிதரப்பில் குறுக்கு விசாரணை- வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியும். வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நான் சொல்லி தாக்கல் செய்ததுதான். ஆவணங்களை வழக்கறிஞர் படித்து காட்டினார். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கின் பட்டா வாதி பிரதிவாதி பெயரில் உள்ளது. வேறு யார் பெயரிலும் இல்லை. வழக்கு சொத்திற்கு பட்டா எப்போது கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது, வழக்கு சொத்து 7 1/2 செண்ட் ஆகும். வழக்கு சொத்தின் பட்டாவின் வகைப்பாடு தெரியாது, வரைபட அளவுகள் நீளம், அகலம் தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள வீட்டின் அளவுகள் தெரியாது . எனக்கு படிக்க தெரியாது. வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்

தெரியாது. எனக்கு பூவானிக்குப்பம் ராசுபிள்ளை, பாலகிருஷ்ண ரெட்டியார்,. குப்புசாமி நாயுடு, கோகிலாம்பாள், எஸ்.குமார், ஆதிலட்சுமி, வெங்கடேசன் ஆகியோர்களை தெரியும், இவர்கள் அனைவரும் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளவர்கள். எனது அண்ணன் அரசு உத்தியோகத்திற்கு எப்போது சென்றார் என்று எனக்கு தெரியாது. நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை. மாடு மேய்க்கிறேன். வாதிக்கு ஆண் வாரிசு இல்லை என்பதால் வழக்கு சொத்தை பிரித்து தரமுடியாது என்று சொன்னேன் என்றால் சரியல்ல,. வழக்கு சொத்தில் வாதியை விடாமல் பிரச்சினை செய்ததால் அவர் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. போலிஸ் வழக்கில் நான் போலிசாரிடம் என் செல்வாக்கை பயன்படுத்தி என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. லோக்கல் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். நான் போலிஸ் ஸ்டேஷனில் கையெழுத்து மட்டும் தான் போட்டேன். அதில் என்ன விவரம் எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது., வன்னியர்பாளையத்தில் உள்ள வீட்டின் மேல் வாதி வழக்கு போடவில்லை என்றால் சரிதான், வழக்கு சொத்தில் உள்ள வீடு வாதி கட்டியது என்றால் சரிதான். வாதி கட்டிய வீட்டை நான் அபகரிக்க வேண்டும் என்பதால் அதை மறைத்து என் அப்பா கட்டியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து போர்டு பிரசிடன்டிடம் வீடு நான் கட்டியதாக வாங்கியுள்ள ஆவணம் போலி என்றால் சரியல்ல. எந்த தேதியில் வாங்கியது என்று எனக்கு தெரியாது. நான் காலை 10 மணிக்கு வாங்கினேன். வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். வீட்டு வரி கட்டி தான் ரசீது வாங்கி தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் என் அண்ணனுக்கும் மட்டுமே சொந்தமான வழக்கு

சொத்திற்கு வீட்டுவரி ரசீது என் மனைவி பெயருக்கு பஞ்சாயத்து கிளார்க் தான் கொடுத்தார். எத்தனை வீட்டு வரி ரசீதுகளை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. என் மனைவி தான் ரசீதுகளை கொடுத்தார். நாங்கள் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகளில் கதவு இலக்கம் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 4 வீட்டு வரி ரசீதும் போலியானது என்றால் சரியல்ல. வாதிதான் வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றாலும், அதில் கதவிலக்கம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி ஓய்வு பெற்ற அரசு ஊழியர் என்பதால் அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி பொய்யாக வீட்டுவரி ரசீது தயார் செய்துள்ளார் என்று நான் சொல்லவில்லை. வாதி பாகபிரிவினை வழக்கு போட்ட பிறகு வீட்டுவரி ரசீது பஞ்சாயத்து போர்டில் கொடுக்கவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.